பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 06 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கான அதிகாரத்தை உறுதி செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி கூறியுள்ளார்.

2. 2047-க்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு இளைஞர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. திருப்பரங்குன்றம் விவகாரத்தில் திமுக-வும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் அரசியல் செய்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

4. நாளை தொடங்கும் கைலாஷ் மானசரோவர் யாத்திரைக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

5. ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு அனைத்துத்துறைகளிலும் பெண்களுக்கு அதிகாரம் அளித்து வருவதாக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாலின திட்டமிடல் குறித்த இணையதளத்தை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்த இணையதளம் கொள்கை வகுப்போருக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்றார்.

பாலின திட்டமிடல் நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு தேவையான தரவுகள், ஆதாரங்கள் மற்றும் பிற சாதனங்கள் இந்த இணையதளத்தில் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆண்டு அரசின் மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டில் எட்டு புள்ளி எட்டு ஆறு சதவீதம் பாலின திட்டமிடலுக்கு பயன்படுத்தப்பட உள்ளதாகவும் திருமதி அன்னபூர்ணா தேவி தெரிவித்தார்.

<<<<<<>>>>

2047-க்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு இளைஞர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

அஜ்மீரில் இன்று ராஜஸ்தான் மத்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றிய அவர், அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியாவை வலிமைமிக்க நாடாக உருவாக்குவதற்கான தீர்மானத்தை நாட்டு மக்கள் ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

உலகின் மாறிவரும் சூழ்நிலையில் வலிமை பெற்ற நடாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள், வேலை தேடுபவராக அல்லாமல், தொழில் முனைவோராக உருவாக வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களின் தரம் உலக அளவில் உயர்ந்து வருவதாக அவர் கூறினார்.

வலிமையான பொருளாதாரமாக நாட்டை உயர்த்துவதற்கு புதிய அணுகுமுறை தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு நாட்டில் 11 உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே உலக தரவரிசையில் முன்னிலை வகிக்க முடிந்ததாக அவர் கூறினார்.

ஆனால், தற்போது இந்த எண்ணிக்கை 54-ஆக உயர்ந்துள்ளது என்றும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<<>>>>

கடந்த 2020-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பாதுகாப்பு கொள்முதலுக்கான நடைமுறையில் மாற்றங்களை கொண்டுவருவதற்கான முயற்சியை பாதுகாப்பு அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

தற்போதைய பாதுகாப்புக்கான கொள்கைகள் மற்றும் புதிய முயற்சிகளின் அடிப்படையில் கொள்முதல் நடைமுறைகளை மாற்றியமைப்பதற்கான ஆய்வையும் பாதுகாப்பு அமைச்சகம் தொடங்கியுள்ளது.

<<<<<<>>>>

கைலாஷ் மானசரோவர் யாத்திரையை சுமூகமாக மேற்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நாதுலா கணவாய் வழியாக நாளை தொடங்கும் இந்த யாத்திரையை சிக்கிம் ஆளுநர் திரு ஓம் பிரகாஷ் மாத்தூர் தொடங்கிவைக்க உள்ளார்.

முதல் குழுவில் 36 யாத்ரிகர்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்களுடன் வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் இருவரும் செல்ல இருப்பதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

மொத்தம் பத்து குழுக்கள் நாதுலா கணவாய் வழியாக கைலாஷ் மானசரோவர் யாத்திரை மேற்கொள்ள இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>

சிக்கில் செல் எனப்படும் அரிவால் செல் விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெபி நட்டா வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் சிக்கில் செல் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த இது சிறந்த தருணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த பாதிப்பு குறித்து மக்களிடையே எடுத்துரைத்து நோயின் ஆரம்பக்கட்டத்திலேயே பரிசோதனைகள் மேற்கொள்வதை ஊக்குவிப்பதுடன் இது குறித்த ஆராய்ச்சிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க்வும் இந்நாளில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்த பாதிப்புக்கு சிகிச்சை பெறுவோரிடம் கனிவுடன் நடந்து கொள்வதோடு விரிவான மற்றும் பாதுகாப்பான சூழலை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இந்நாள் நினைவுபடுத்துவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

தண்ணீரில் உள்ள ஃபுளோரைடை சுத்திகரிப்பதற்கான திறன்மிக்க நவீன சாதனத்தை ஐ ஐ டி குவஹாத்தி உருவாக்கியுள்ளது.

இந்த சாதனத்தின் மூலம் ஆயிரம் லிட்டர் தண்ணீரை சுத்திகரிக்க 20 ரூபாய் மட்டுமே செலவாகும்.

அத்துடன் இந்த சாதனம் மூலம், தினந்தோறும் 20 ஆயிரம் லிட்டர் தண்ணீரை சுத்திகரிப்பதுடன், 89 சதவீத அளவிற்கு ஃபுளோரைடை அகற்ற முடியும் என்றும் ஐ ஐ டி விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் திமுக-வும், அதன் கூட்டணி கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சியும் அரசியல் செய்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திரு தொல் திருமாவளவன் இந்து மத நம்பிக்கையில் ஆர்வம் உள்ளவர் போன்று காட்டிக்கொள்ள முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று கூறி அபகரிக்க முயல்வோருக்கு எதிராக இந்துக்கள் போராடி வருவதாகவும் திரு எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>

தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு யஷ்வந்த் வர்மாவுக்கு எதிராக பதவி நீக்க தீர்மானம் கொண்டுவருவதற்கு தேவையான ஆதாரங்கள் இருப்பதாக, இதுதொடர்பாக அமைக்கப்பட்ட மூன்று உறுப்பினர் விசாரணைக்குழு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் உள்ள நீதிபதி வர்மாவின் வீட்டில் கணக்கில் வராத பணம் பெருமளவுக்கு கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பான புகாரின்பேரில் பஞ்சாப் - ஹரியானா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு **Sheel Nagu** தலைமையில் அமைக்கப்பட்ட குழு இதனை தெரிவித்துள்ளது.

மேலும், தம் மீதான புகார் தமக்கு எதிராக எழுப்பப்பட்ட கட்டுக்கதை என்ற நீதிபதி வர்மாவின் கருத்தையும் விசாரணைக்குழு நிராகரித்துள்ளது.

<<<<<<>>>>

நாட்டில் வெவ்வேறு இனங்களை சேர்ந்த மக்கள் அனைவரும் பண்பாட்டு ரீதியில் சகோதர மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருவதாக புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் மதுரையில் முருக பக்தர்கள் மாநாட்டு திடலை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதுச்சேரியில் உள்ள ஒரு முருகன் கோவிலை கட்டியவர் இஸ்லாமியர் என்பதை சுட்டிக்காட்டினார்.

தமிழ் கடவுளான முருகன் மீது தாம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதாக கூறிய அவர், தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் முருகப்பெருமானை மறக்காமல் வழிபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

பழமையான கோவில்கள் மற்றும் சித்தர்களின் நினைவிடங்கள் அதிகம் அமைந்துள்ள புதுச்சேரியை ஆன்மிக தலமாக மாற்ற முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் திரு கைலாஷ் நாதன் தெரிவித்தார்.

<<<<<<>>>>

தமிழகத்தில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் மேம்படுத்தப்பட்டு வரும் மருத்துவமனைகளில் உள்ள காலிபணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரிகள் மூலம், ஆண்டுக்கு 11 ஆயிரத்து 850 மருத்துவர்கள் உருவாகி வருவதாக கூறினார்.

அரசு கல்லூரிகளில் மட்டும் 5 ஆயிரத்து 50 மருத்துவர்கள் இளநிலை மருத்துவப்படிப்பை முடித்து வெளியே வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கின் தீர்ப்பு வெளியானபின் கிராமப்புற சுகாதார செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றும் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**<<<<<<>>>>**

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

ஆசிய ஜூனியர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

வியட்நாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 50 கிலோ எடைப்பிரிவில் **Priyanshi Prajapat** –ம், 55 கிலோ எடைப்பிரிவில் **Reena-**வும், 68 கிலோ எடைப்பிரிவில் **Srishti**-யும், 76 கிலோ எடைப்பிரிவில் பிரியா மாலிக்கும் தங்கப்பதக்கங்களை வென்றனர்.

மகளிர் 59 கிலோ எடைப்பிரிவில் **Tanvi Magdum** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 72 கிலோ எடைப்பிரிவில் **Ankit Gulia** –வும், 97 கிலோ எடைப்பிரிவில் **Nitesh Siwach** –ம் வெண்கலப்பதக்கங்களை வென்றனர்.

-------------

பிரான்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அடில் கல்யாண்பூர் - **Parikashit Somani** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 7-6 என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் **Max Gurri – Nikolas** இணையை வென்றது.

-----------

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--------------

துனிஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 6-3 என்ற செட் கணக்கில், போர்ச்சுக்கல்லின் **Tomas Luis**-ஐ வென்றார்.

-------------

ஆசிய பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **'Manasi Joshi** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 16-21, 21-15, 21-14 என்ற செட் கணக்கில், சீனாவின் **Zuxian Xiao** –ஐ வென்றார்.

**<<<<<>>>>>**